விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 067 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 12 திங்கட்கிழமை (24.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர்
இன்று ஆரம்பம்



03ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை
ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



07ஆம் பக்கம் பார்க்க

## மகன் தாக்கியதில் படுகாயமடைந்த தந்தை உயிரிழப்பு

(வத்திராயன்)
யாழ்.வடமராட்சி வத்திராயன் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் படுகாயமடைந்த 02

### உள்ளூராட்சித் தேர்தல்
## ஒன்பது தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டி

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசியக் கட்சிகளில் 09 கட்சிகள் ஒன்றாக இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் 15

## வேட்புமனுத் தாக்கலின் பின்னரே தேர்தல் திகதி அறிவிக்கப்படும்
### உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)
அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும். வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்ததன் பின்னரே தேர் 02

### கோப்பாயில்
## மூதாட்டி சடலமாக மீட்பு

(கோப்பாய்)
கோப்பாய் பகுதியில் பார்வையற்ற மூதாட்டி ஒருவர் நேற்று வீட்டு வளவிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கட்டப்பிராய் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பிறவுண்ராசா நாகேஸ்வரி (வயது-78) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
இவர் தனது வயோதிப சகோதரனின் உதவியுடன் குறித்த வீட்டில் வசித்து வந்த நிலையில் நேற்று 02

# புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம்
# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம்

### ஐ.நா கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் விஜித ஹேரத் பாராளுமன்றில் வாக்குறுதி



(கொழும்பு) காலாவதியாகியுள்ள அரசியலமைப்பை இரத்துச் செய்து மக்களின் விருப்பத்துடன் புதிய அரசியலமைப்பை நிச்சயம் உருவாக்குவோம். தேசிய நல்லிணக்கம், ஜனநாயகம் ஆகியவற்றை ஸ்திரப்படுத்துவோம். வழங்கிய வாக்குறுதிக்கு அமையப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வெகுவிரைவில் இரத்துச் செய்வோம் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிதாரியை வழிநடத்திய கொமாண்டோ சலிந்த யார்?
### வட்ஸ்அப் உரையாடலால் புதுக்கடை நீதிமன்ற சூட்டுச் சம்பவத்தில் புதிய திருப்பம்

(கொழும்பு)
பாதாள உலகக்குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்படுவதற்கு முன்பு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர், 15

## சூட்டுச் சம்பவங்களினால் பொருளாதாரம் பாதிப்புறும்
### அரசுக்கு ஹர்ஷ டி சில்வா எடுத்துரைப்பு

(கொழும்பு)
அரசாங்கத்தின் மமதையும் பலவீனமுமே நாட்டில் தொடர்ச்சியாகப் பதிவாகிக் கொண்டிருக்கும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்குப் பிரதான காரணியாகும். இவை தேசிய பாதுகாப்பில் மாத்திரமின்றி சுற்றுலாத் துறையின் ஊடாக 16

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு சட்டத்தடை ஏதுமில்லை
### ஜனாதிபதி தெரிவிப்பு

(கண்டி)
உள்ளூராட்சித் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 15

### வேகக்கட்டுப்பாட்டை இழந்த
## வாகனம் விபத்து
### கந்தர்மடம் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டச்செயலாளரின் மகன் செலுத் 15



### அத்துமீறிய மீன்பிடி
## 32 தமிழக மீனவர்கள் மன்னாரில் கைது

(மன்னார்)
இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி வைத்திருந்த பெண் ஒருவர் கைது

(ஹபராதுவ)

வீடு ஒன்றில் இருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் இரண்டு வாள்களுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பெண் நேற்று முன்தினம் இரவு ஹபராதுவ பொலிஸ் பிரிவின் வெல்லேகேவத்த பகுதியில் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண், அதே இடத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் எனத் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டபோது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு கைத்துப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு கைத்துப்பாக்கி, 2 பிஸ்டல் தோட்டாக்கள் மற்றும் 2 வாள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ந-7)

# புத்தூரில் மயங்கி விழுந்தவர் மரணம்

(புத்தூர்)

புத்தூர்ப் பகுதியிலுள்ள உணவகமொன்றில் நேற்று முன்தினம்(23) சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை மயங்கி விழுந்தவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

அச்சுவேலி வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற வேளை ஏற்கனவே உயிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த முகமது ஹனிபா முகமது சமீர்(வயது 49) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது.

யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய பாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ந-7,60)

# பி.பி.சி ஆனந்தி காலமானார்



(சாவகச்சேரி)

பி.பி.சி தமிழோசையின் மூத்த தயாரிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் 33 வருடங்கள் கடமை யாற்றிய திருமதி ஆனந்தி சூரியபிரகாசம் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த இவர் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவி ஆவார்.

பி.பி.சி தமிழோசையில் ஒலிபரப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் கொரில்லா போர்முறை தொடர்பான இவரது நேர்காணல் பெரிதும் பேசுபொருளாகியருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

# யாழ். மத்தியில் இன்று மாணவத் தலைவர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த மாணவர் தலைவர் தினம் இன்று காலை 9 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கில் சிரேஷ்ட மாணவத் தலைவர் எம்.பவனீதன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் கல்லூரி அதிபர் எஸ்.இந்திரகுமார் வாழ்த்துரையை வழங்குவார்.

இந்நிகழ்வில் யாழ். கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் க.ராஜமனோகரன் பிரதம விருந்தினராகவும் முன்னாள் சிரேஷ்ட மாணவத் தலைவர் எஸ்.சுரேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ந-7)

# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

தெஹியத்தகண்டிய பகுதியில் உள்ள தனியார் பண்ணை ஒன்றில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தெஹியத்த கண்டிய, முவபெட்டி கேவல, ஹுலங்பந்தனாகல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் வீரகெட்டிய, எதரம்தெனிய, கிராவெல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதா கவும் காயமடைந்த நபர் தெஹியத்த கண்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## மூதாட்டி...

ஞாயிற்றுக்கிழமை வீட்டு வளவினுள் சடலமாக காணப்படுவதாகக் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் சடலத்தினை மீட்டு பிரேதப் பரிசோனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய பாலசிங்கம் மேற்கொண்டார். (ந-7,60)

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ -076 636 3378

E.mail: Valampurii@yahoo.com

## வேட்புமனுத்...

தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து எதிர்க்கட்சிகள் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். அரசியலமைப்பின் பிரகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகத் தீர்மானம் எடுப்போம்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம், கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் பண்டிகைக் கால விடுமுறை தொடர்பில் எதிர்க்கட்சிகளின் அரசியல் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரல் மற்றும் வாக்கெடுப்புத் திகதி தொடர்பில் ஆளும் தரப்பினர் தமது நிலைப்பாட்டை குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும் தேர்தல் திகதி குறித்து இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை. அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும்.வேட்புமனுத்தாக்கல் நிறைவடைந்தன் பின்னரே தேர்தலுக்கான வாக்கெடுப்புத்திகதி அறிவிக்கப்படும்.

அனைவருக்கும் சாதகமான வகையில் தான் தேர்தல் திகதி அறிவிக்கப்படும். தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் போதுமான காலவகாசம் வழங்கப்படும் என்றார். (ந-7)

## படுகாயமடைந்த...

நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் வவுனியாவில் இருந்து வாகனம் ஒன்றில் ஆட்களை அழைத்து வந்து வத்திராயனில் உள்ள வீட்டுக்குள் புகுந்து தனது தந்தை, சகோதரன், சகோதரனின் மகன் மற்றும் சகோதரனின் மனைவி ஆகியோர் மீது தாக்குதல் நடத்தினார்.

இத்தாக்குதலில் காயமடைந்த நால்வரும் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த மரணம் சம்பவித்துள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் இன்று!

(ஜெனீவா)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் இன்று 24 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.**



இதில் பங்கேற்பதற்காக ஜெனீவா சென்ற இலங்கையின் உயர்மட்ட இராஜதந்திர சிறப்பு குழு 28 ஆம் திகதி வரை ஐ.நா மனித உரிமைகள் அமர்வுகளில் கலந்துகொள்ள உள்ளது. அத்துடன் நட்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளை பிரத்தியேகமாகச் சந்தித்து இலங்கைத் தரப்பு கலந்துரையாட உள்ளது.

மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51/1 நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கவும், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற போர்க்குற்றங்கள் குறித்து ஆதாரங்களைச் சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் தீர்மானத்தை நிராகரிக்கவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி கூடிய அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதேவேளை உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளுக்குத் தீர்வை காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக உறுதியளித்துள்ளது. ஆனால் ஜெனீவா தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.


இவ்வாறானதொரு நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளமையினால் இலங்கை தொடர்பான செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதில் பின்னடைவுகள் ஏற்படக்கூடும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிரந்தர உறுப்புரிமைகளைக் கொண்ட சர்வதேச அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இதேவேளை அமெரிக்கா விலகியமையை சுட்டிக்காட்டி, 51/1 நகல்வடிவையும் இலங்கைக்கு எதிராக 2014 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் வலுவிழக்க வைக்கும் கோரிக்கையை ஜெனீவாவில் முன் வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து நட்பு நாடுகளான சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் கியூபா போன்ற நாடுகளின் ஆதரவையும் இலங்கை கோரியுள்ளது.

எவ்வாறாயினும் இறுதிக் கட்டப்போரில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலான நேர்மையான அறிக்கையை ஜெனீவாவுக்கு பதிலளிப்பதாக மாத்திரம் அல்லாது எமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டைச் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த முன்வைப்பதாக அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இலங்கை வருகிறார் இந்தியப் பிரதமர் மோடி



(கொழும்பு)

உத்தியோகப்பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் உள்ளிட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைச்சந்தித்து கலந்துரையாட உள்ள பிரதமர் நரேந்திர மோடி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொழும்பில் சந்திக்க உள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் நடைபெறவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது ஏற்கனவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ள திட்டங்களை செயல் வடிவில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மேலும் இந்த விஜயத்தின் போது சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானத் திறப்பு விழாவிலும் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளார்.

சம்பூர் மின் நிலையத் திட்டம், திருகோணமலை எரிபொருள் மற்றும் பொருளாதார வலயம், வலுசக்தி குழாய் திட்டம், மற்றும் வடக்கு தீவுகளின் சூரிய சக்தித் திட்டம் உட்பட ஏற்கனவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்ட திட்டங்கள் குறித்து பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது செயல்வடிவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

# வடக்கு கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை உடனடியாக கட்டுப்படுத்துங்கள்!

## சபையில் ரவிகரன் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)

கடற்றொழிலில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை சட்டவிரோதிகள் செய்து வருவதால் உண்மையான மீனவக் குடும்பங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். அரசாங்கம் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத தொழில்களை உடனடியாக நிறுத்தி மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கடல் இப்போது சட்டவிரோதிகளின் ஆளுகையில் காணப்படுகின்றது.

சுருக்குவலை வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், டைனமற் வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோதத் தொழில்களால் வடக்குக் கடல் நிரம்பியுள்ளது.

சட்டத்துக்குப் புறம்பான வகையில் சட்டவிரோதிகளின் ஆட்சி வடக்குக் கடலிலே நடக்கின்றது. வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மீனவர்கள், மீனவக்குடும்பங்கள் அதிகமாக உள்ளனர்.

மீன்பிடியாளர்களைத்தவிர பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இத்தொழிலை நம்பி வாழ்கின்றார்கள். 10,500 இற்கும்மேற்பட்ட பெண் தலைமைக் குடும்பங்கள் கூட இதனை நம்பி வாழ்கின்றார்கள். முன்னைய ஆட்சியாளர்கள் சட்டவிரோதிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாததால் இப்போது விரிவடைந்து கடல்முழுவதும் சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டது.

மீனவ மக்களில் பலர் இந்தத் தொழிலை விட்டுவிடலாமோ என்று எண்ணுமளவுக்கு நிலமை மோசமாகின்றது. நாட்டின் கடற்பகுதியில், கணிசமான பகுதி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ளது. இதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. இதனை நீங்கள் கட்டுப்படுத்தாவிட்டால் மீன் இனத்தின் உற்பத்தி குறைந்து, மீன் இனம் அழிக்கப்படும். மீன் வங்கி என்று சொல்லப்படும் வடபகுதிக் கடலில் மீன்கள் அற்றநிலை கூட உருவாகலாம் எனத் தெரிவித்தார்.

இந் நிலையில் குறித்த பிரேரணையை சபையில் முன்வைத்தமைக்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு நன்றி தெரிவித்ததுடன் வடபகுதியில் இடம்பெறும் இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பதிலளித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சம்பியன் டிராபி தொடரில் ஆஸி.புதிய சாதனை



சம்பியன்ஸ் டிராபி தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின. முதலில் ஆடிய இங்கிலாந்து 50 ஓவரில் 351 ரன்கள் குவித்தது. பொறுப்புடன் ஆடிய பென் டக்கெட் சதமடித்து 165 ரன்னில் அவுட் ஆனார்.

அடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலியா 47.3 ஓவரில் 356 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ஜோஷ் இங்கிலிஸ் 120 ரன்னும், மேக்ஸ்வெல் 32 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். மேத்யூ ஷார்ட், அலெக்ஸ் கேரி ஆகியோர் அரை சதம் கடந்தனர்.

இந்நிலையில், சம்பியன்ஸ் டிராபி தொடரில் அதிக ரன்களை விரட்டிப் பிடித்து அவுஸ்திரேலிய அணி சாதனை படைத்துள்ளது.

ஏற்கனவே கடந்த 2017 ஆம் ஆண்டில் இந்திய அணி நிர்ணயித்த (321/6) இலக்கை இலங்கை அணி (322/3) ரன் எடுத்து வெற்றிபெற்று இருந்தது.

ஐ.சி.சி., ஒருநாள் தொடரில் (உலக கோப்பை, சம்பியன்ஸ் டிராபி) இது சிறந்த சேஸ் ஆனது.

இதேபோல், இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்திரேலிய அணியின் சிறந்த சேஸ் ஆகவும் இது அமைந்தது. சிட்னியில் 2011 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா 334/8 ரன் எடுத்து வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (6-8)

## சம்பியன்ஷிப் பட்டத்தை தனதாக்கிய ஆண்ட்ரீவா

டுபாயில் அமைந்துள்ள ஏவியேஷன் கழக டென்னிஸ் அரங்கில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற டுபாய் டென்னிஸ் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் கிளாரா டவுசனை 17 வயதான மிர்ரா ஆண்ட்ரீவா தோற்கடித்து வரலாறு படைத்தார்.

106 நிமிட இறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை டென்மார்க் நட்சத்திரமான கிளாரா டவுசனை 7-6 (7-1) 6-1 என்ற கணக்கில் தோற்கடித்தார்.

இது அவரது தொழில் வாழ்க்கையில் வெற்றி கொள்ளும் இரண்டாவது பெரிய பட்டமாகும்.

இந்த வெற்றியுடன் WTA கிண்ணத்தை வென்ற இளம் வீராங்கனை என்ற பெருமையை ஆண்ட்ரீவா பெற்றுள்ளார்.

அவரது இந்த வெற்றியுடன் இளம் வீராங்கனை அடுத்த வாரம் முதல் சர்வதேச டென்னிஸ் தர வரிசையில் முதல் 10 இடங்களுக்குள் முதல் முறையாக முன்னேறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்ட்ரீவா இதற்கு முன்பு 2024 ஆம் ஆண்டின் மத்தியில் லசி ஓபனை வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (6-8)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3300

கிரு

உறவினர்- உங்க பிரண்ஸ்ஸோட லாஸ்ட்டா எங்க ரூர் போனீங்க...
நான்- நாங்க பிளான் போடுறத்தோட சரிங்க ரூர் எல்லாம் போறது இல்லை.



ஆதீரா




மனைவி வந்த பின்னாடி நிம்மதியைத் தேடி ஓட வேண்டியது...

மியூரி

சனிக்கிழமை இரவு தூங்கப்போகும்போது இருக்கும் சந்தோசம்



ஞாயிற்றுக்கிழமை இரவு இருப்பதில்லை...

கிஷோ




அதைப்பிடிக்க, ஒவ்வொரு மனைவிக்குள்ளும் ஒரு பொலிஸும் உண்டு..

நந்தீஸ்

காலையில் கெத்தா எழுந்து



ராத்திரி சோகமாக தூங்குறது தான் ஞாயிற்றுக்கிழமை

மிக்னேஸ்

வீடு கட்டலாம்ன்னு நினைக்கிறேன் எவ்வளவு செலவு ஆகும்.. நினைக்கிறதுக்கு எல்லாம் செலவு ஆகாது...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவ கொலை அடுத்தடுத்து கைதுகள்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலைக்கு உதவியதற்காக மேலும் மூன்று சந்தேக நபர்களைக் கொழும்பு குற்றப்பிரிவு கைது செய்துள்ளது.

இந்தக் கைதுகளுடன், கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.

நேற்றுக் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் கம்பஹா மற்றும் உடுகம் பொலவைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்ததற்காகவும், குற்றம் நடந்ததற்கு முந்தைய நாள் துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு அதை வழங்கியதற்காகவும் கம்பஹா, மல்வத்த சாலையைச் சேர்ந்த 22 வயது டைய ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவத்திற்குப் பிறகு துப்பாக்கிச் சூடு நடத்தியவரையும் மற்றொரு சந்தேக நபரையும் முச்சக்கர வண்டியில் தப்பிக்க உதவியதற்காக உடுகம் பொலவைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும் 19 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டனர். (நி-8)


BANK OF CEYLON
BOC
Bankers to the Nation

# இலங்கை வங்கி 'BOC YOUTH' கடன் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்துள்ளது. மேலும் 10,000 இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதே இலக்கு

இலங்கை வங்கி 'BOC Youth' கடன் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கடன் திட்டம் இலங்கையின் இளம் தொழில்முனைவோரை வலுப்படுத்துவதையும் அவர்களின் வியாபார இலட்சியங்களுக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டது. இலங்கை வங்கியின் தலைவர் திரு. காவிந்த டி சொய்சா மற்றும் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரசல் பொன்சேகா, நிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் இலங்கை வங்கியின் பணியாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இலங்கை வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB), இளம் தொழில் முனைவோர், கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB), சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி திணைக்களம் (SEDB), தேசிய தொழில் முயற்சி அதிகார சபை (NEDA), தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA), மற்றும் கைத்தொழிற் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) என்பவற்றின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட னர்.

'BOC Youth' கடன் திட்டத்தின் முதற் கட்டமானது 11,256 இளம் தொழில்முனைவோருக்கு 7% வட்டி வீதத்தில் 500,000 ரூபாய் வ்ரையில் கடன் வசதிகளை வழங்கியுள்ளது.

முதற் கட்டத்தின் கீழ், பல்வேறு துறைகளில் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 19.50% உற்பத்தி துறைக்கும் 18.96மூ விவசாயம், அலங்காரச் செடி வளர்ப்பு மற்றும் மீன்வளம் மற்றும் சுகாதாரம், சமூக சேவைகள், கட்டுமானம், தகவல் தொழில்நுட்பம், கல்வி, சுற்றுலா, கலை, சில்லறை வியாபாரம், பொழுதுபோக்கு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளுக்கும் ஒதுக்கப்பட்டன. வலுவான வணிகத் திட் டங்களைக் கொண்டிருக்கும் விண் ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளித்து தீவிரமான மதிப்பீட்டின் ஊடாகவே இலங்கை வங்கி இக்கடன் வசதிகளை வழங்குகின்றது.

மேலதிகமாக 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், திட்டத்தின் அடுத்த கட்டம் மேலும் 10 ஆயிரம் இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தனிப்பட்ட கடன் தொகை 500,000 ரூபாயாக உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் இந்த முயற்சியின் பாகமாக இருப்பதற்கும் இலங்கை வங்கி இளம் தொழில்முனைவோரை ஊக்குவித்து வருகிறது.

இளம் வியாபார உரிமையாளர்களுக்கு நிதி முகாமைத்துவத்தை எளிதாக்குவதற்காக இலங்கை வங்கி பல டிஜிற்றல் வங்கி கருவிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஸ்மாட் பே (Smartpay), ஸ்மாட் ஒன்லைன் பாங்கிங், கைபேசி வங்கியியல் (BApp) இ-வணிகம் செயற்படுத்தப்பட்ட டெபிட் அட்டைகள் மற்றும் பிஓசி கனக்ட் போன்ற சேவைகளுடன் வங்கி இப்போது ஒன்லைன் கடன் விண்ணப்பங்களை வழங்குகின்றது.

இந்தத் தீர்வுகள் தொழில் முனைவோர் தங்களது வணிகங்களை திறம்பட நிர்வகிக்க உதவும் பாதுகாப்பான மற்றும் திறமையான வங்கி விருப்பங்களை வழங்குகின்றன.

85 ஆண்டுக ளுக்கும் மேலாக இலங்கை வங்கி இலங்கையின் நிதி முறைமையின் ஒரு மைல் கல்லாக இருந்து வருகின்றது. தனிநபர்களையும், வணிகங்களையும் உலகளாவிய வாய்ப்புகளுடன் இணைக்கின்றது.

நாடு முழுவதிலும் உள்ள 2,300 இற்கும் மேற்பட்ட விரிவான வலையமைப்பின் ஊடாக இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் பரந்தளவிலான நிதிச் சேவைகளை மிகவும் இலகுவாக அணுகுவதற்கான வாய்ப்பினை உறுதி செய்கின்றது. மேலும் 2024 ஆம் ஆண்டு முதல் 1000 உலக வங்கிகளில் இலங்கையைச் சேர்ந்த ஒரேயொரு வங்கியாகவும் 2021, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான வங்கியாளராகவும் பிரான்ட் பினான்ஸ் லங்கா நிறுவனத்தால் இலங்கையின் முதற்தர வங்கியியல் வியாபார நாமமாக The Banker Magazine UK இனால் தரப்படுத்தப்பட்டது. SLIM KANTAR Peoples Awards 2024 இல் ஆண்டின் மக்களுக்கான சிறந்த வங்கிச் சேவைகள் வர்த்தக நாமத்தையும் இலங்கை வங்கி பெற்றுக்கொண்டது.

சர்வதேச ரீதியாக, இலங்கை வங்கி ஐக்கிய இராச்சியத்தில் லண்டன், மாலைதீவில் மாலே மற்றும் ஹுலுமாலே, இந்தியாவில் சென்னை ஆகிய முக்கிய இடங்களில் கிளை நிறுவனங்களை நிறுவி தனது வலுவான இருப்பை ஸ்திரப்படுத்தியுள்ளது.

விளம்பர விபரணம்


# இராசிபலன்

24.02.2025
மாசி 12, திங்கட்கிழமை
ஏகாதசி முற்பகல் 11.27 மணிவரை.

பூராடம் பிற்பகல் 4.59 மணிவரை
சுபநேரம்-12.30-2.00 மணிவரை
இராகுகாலம் -8.00-9.30 மணிவரை

சந்திராஷ்டமம்.
மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்

**மேஷம்**
ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பய ணங்கள் கைகூடும்.

**ரிஷபம்**
ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், உறவினர்கள் நண்பர்களிடம் பேசும் போது கவனம் தேவை, வேலைச்சுமை கூடும், பிரயாண சுகமுண்டு.

**மிதுனம்**
நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்ளுவார்கள், ஆடம்பரப்பொட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கடகம்**
உறவினர்களின் சந்திப்பால் உற்சாகம் பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**சிம்மம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**
சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், புதிய நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்

**துலாம்**
சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள் , செய்தொழில் மேன்மையுண்டு எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு, விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**
புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு**
எதிர்பாராத காரியம் கை கூடும் சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்**
ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்**
முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சிரிப்பு இல்லாத வாழ்க்கை சிறகு இல்லாத பறவைக்குச் சமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட-கிழக்கு தமிழக உறவை

# வலுப்படுத்தவே இந்திய தூதரகம்

## துணைத்தூதுவர் சாய் முரளி

(யாழ்ப்பாணம்)

**இராஜதந்திர உறவுகளை முன்னெடுக்கும் கட்டமைப்பை கொண்டதாக மட்டுமல்லாது வடக்கு - கிழக்கு மற்றும் தமிழகத்தின் உறவை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் எமது இந்திய துணைத் தூதரகம் செயற்படுகிறது.**



யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு இடையிலான சந்திப்ப நேற்று முன்தினம் யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள இந்திய தூதுவரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ்.இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 2010 ஆம் ஆண்டு இந்த துணைத் தூதரகத்தை நாம் இங்கு ஆரம்பித்தோம்.

குறிப்பாக வடக்கு மக்களுக்காகவும் இங்குள்ள மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவுமே யாழ்ப்பாணத்தில் இந்த தூதரகத்தை நாம் ஆரம்பித்தோம்.

இதேநேரம் கடந்த காலத்தில் இந்தியாவால் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் 47 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இந்தியாவிலிருந்து பிரதமர் இங்கு வரும்போதோ அல்லது இலங்கையிலிருந்து ஜனாதிபதி ஒருவர் அங்கு செல்லும் போதோ அல்லது உயர்மட்ட சந்திப்புகளின் முடிவில் ஊடக வெளியீடுகளை பார்த்தால் அதில் இருக்கும் விடயங்கள் 75 முதல் 80 வீதமானவை வடக்கு தொடர்பானவையாகவே இருக்கின்றன.

நாம் மட்டுமே நிரந்தரமாக உங்களுடேனேயே இருக்கிறோம். வடக்கில் நாம் செயற்படுத்தும் சகல திட்டங்களையும் நாம் மானியமாகவே வழங்குகிறோம் நாம் நண்பர்களாக இருப்பதைவிட உடன் பிறந்த சகோதரர்களாக இருப்பதே சிறந்ததாகும்.

இதுவே உறவுகளையும் மேம்படுத்தும். நீங்கள் எந்நேரமானாலும் எமது கதவுகளைத் தட்டலாம். உங்களுக்காக எமது கதவுகள் என்றும் திறந்திருக்கும் என தெரிவித்தார்.

அதேவேளை யாழ் இந்திய துணைத்தூதரகமும் யாழ். ஊடகவியாளர்களும் சகோதரர்களாகவே இருக்க வேண்டும் என விரும்புகின்றேன் எனத் தெரிவித்திருந்தார். (6-8-33)



யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழக்கிழமை கல்லூரி மைதானத்தில் அதிபர் து.திலீப்குமார் தலைமையில் இடம்பெற்றது.

# முழங்காவில் இரணைமாதா நகருக்கு புதிய பேருந்து சேவை

## கிளிநொச்சியிலிருந்து இன்று ஆரம்பம்

(தரும்புரம்)

கிளிநொச்சியில் இருந்து முழங்காவில் இரணை மாதா நகர் வரையான பகுதிகளுக்கு இன்று முதல் புதிய பேருந்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

காலை 9.30 மணி அளவில் கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டு அக்கரையான் முழங்காவில், நாச்சிகுடா ஊடாக இரணை மாதா நகர் வேளாங்கண்ணி வீதி ஊடாக சென்று அங்கிருந்து மீண்டும் வேளாங்கண்ணி வீதி ஊடாக, மறு நாள் காலை 5. 15 இற்கு வேளாங்கண்ணி வீதியில் இருந்து புறப்பட்டு நாச்சிக்குடா முழங்காவில் அக்கரையான் வீதி ஊடாக காலை 8 மணி அளவில் கிளிநொச்சியை வந்தடை யும்.



இச்சேவையானது பல மக்களினது வேண்டுகோளுக்கு இணங்க புதிய பேருந்து சேவை நீடிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி இலங்கை போக்குவரத்து சபை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (6-8-316)

# இரசாயன வெற்றுப்போத்தல்கள் சேமிப்பும் வாகனப் பேரணியும்

(யாழ்ப்பாணம்)

விவசாய இரசாயன வெற்றுப் போத்தல்கள் சேகரிக்கும் ஆரம்ப நிகழ்வும் வாகனப் பேரணியும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

Crop life நிறுவனம் மற்றும் விவசாய நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், பதிவாளர் - பீடை கொல்லி கட்டுபாட்டு பிரிவு, வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர் - ஆராய்ச்சி, உதவி ஆணையாளர் - கமநல அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் - பயிர் வாழ்வு மற்றும் விவசாய சம்மேளன தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் முன்னோடி விவசாயிகளும் பங்கு பற்றவுள்ளனர். (6-8)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை வேம்படிப் பிள்ளையார் கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் புதன்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி இரதோற்சவமும் 12 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (6-8)



யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த புதன்கிழமை கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வெற்றிபெற்ற இல்லத்திற்கான கேடயம் வழங்கிவைக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பராமரிப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் 379 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இயங்குவதாகவும், இவற்றில் 47 நிலையங்கள் அரசாங்கத்திற்குரியது என்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

ஏனைய அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் அரசுசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் அனுசரணையுடன் பராமரிக்கப் படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.


நாடு முழுவதிலும் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் திறன்களை மேம்படுத்தவும் அவற்றின் பௌதீக வள, மனிதவள மேம்பாட்டிற்கும் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் கடந்த 21 ஆம் திகதி அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையில் கூடியபோதே இந்தத் தகவல்கள் முன் வைக்கப்பட்டன. (நி-8)

# மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

(கண்டி)



**நாட்டில் பொது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்று ஞாயிற்றுக் கிழமை கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குற்ற கும்பல்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களினாலேயே சமீபத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளன.

அவற்றை தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

நாட்டில் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் முயற்சி இடம்பெற்று வருவது தொடர்பாகவும் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# சிவராத்திரியை முன்னிட்டு ஜோதிலிங்க தரிசனம்

(யாழ்ப்பாணம்)

பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையத்தினர் மகா சிவராத்திரியை முன்னிட்டு சோமநாதர் ஜோதிலிங்க தரிசனமும், ஆன்மீகக் கண்காட்சியினையும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை யாழ்.இல 211, பிறவுண் வீதியில் (கலட்டிச் சந்திக்கு அருகில்) அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையத்தின் சுகா தாமம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என யாழ்.மாவட்ட பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 10 1/2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: HNDE, TO<br>எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15155 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>12 இல் செவ்<br>கி.பா: 29<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC, bank<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15166 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L ,சாரதி<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15156 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>1 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC, Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: G/15180 |
| பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: O/L, Driver(own) டுபாய்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15157 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 18<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: PHD, Scientist (france)<br>எதிர்பார்ப்பு : விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15182 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# வாகன இறக்குமதிக்கான வரிகளை குறைப்பதில் அரசாங்கம் கவனம்

(கொழும்பு)

சந்தை நடத்தையின் அடிப்படையில், எதிர்காலத்தில் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரிகளை குறைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

சுமார் 5 வருடங்களாக தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்த தனியார் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களை 2025 பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் மீண்டும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், வாகன இறக்குமதி வரி 300 வீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளமையினால் புதிய வாகனங்களின் விலைகள் மிக அதிகமாக இருப்பதாக வாகன இறக்குமதியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான இறக்குமதி வரிகள் காரணமாக வேகனார் என்ற சிறிய ரக காரின் விலை 70 இலட்சத்தில் இருந்து ஒரு கோடியாக உயரும் என்று வாகன இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரம் சந்தையில் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகளின் விலைகளும் அசாதாரணமாக அதிகரித்துள்ளன. இந்த வாகன விலைகளின்படி இன்று ஒரு சாதாரண மனிதனால் வாகனம் வாங்கி செலுத்த முடியாத நிலை காணப்படுவதாக வாகன இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில் சந்தையின் விலை நிலவரங்களை கண்காணித்து வாகன இறக்குமதி வரிகளை குறைக்க வாய்ப்புள்ளதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (நி-8)

# பொலிஸ் அதிகாரிகளுக்கெதிரான முறைப்பாடுகள் அதிகரிப்பு

## கவலை வெளியிட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

பிரதானமாக சித்திரவதை, தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல், துன்புறுத்தல் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த ஆணைக்குழு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் அதன் அனைத்து ஆணையாளர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், பதில் பொலிஸ் மா அதிபர், சட்டம் மற்றும் பொலிஸ் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ரஷ்யா-உக்ரைன் போர் நிறுத்தத்திற்கு ஜெலன்ஸ்கி அவசியமில்லை

## ட்ரம்ப் திட்டவட்டம்



(வோஷிங்டன்)

ரஷ்யா- உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தையில் ஜெலன்ஸ்கி இருப்பது அவசியமில்லை என்று கருதுகிறேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதைத் தொடர்ந்து ரஷ்ய- உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக தெரிவித்து வருகின்றார்.

அவர் ரஷ்ய ஜனாதிபதி புடின் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஆகியோருடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

மேலும் சவுதி அரேபியாவில் அமெரிக்கா, ரஷ்யாவின் உயர்மட்ட அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

அதில் உக்ரைனுக்கு அழைப்பு விடுக்கவில்லை. இதனால் ட்ரம்பை ஜெலன்ஸ்கி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதையடுத்து ஜெலன்ஸ்கியை சர்வாதிகாரி என ட்ரம்ப் விமர்சித்திருந்த நிலையில் ஜெலன்ஸ்கியை ட்ரம்ப் மீண்டும் சாடியுள்ளார்.

இது தொடர்பாக ட்ரம்ப் தெரிவித்ததாவது, "ரஷ்ய ஜனாதிபதி புடினுடனான பேச்சுவார்த்தை நன்றாக இருந்தது ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற் கான பேச்சுவார்த்தையில் ஜெலன்ஸ்கி இருப்பது அவசியமில்லை என்று கருதுகிறேன். அவர் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பேச்சுவார்த்தையில் கடுமை காட்டி வருகிறார்.

இதனால் நான் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் ஜெலன்ஸ்கியோ வேறு உக்ரைன் அதிகாரிகளோ இடம்பெற வேண்டிய அவசியமில்லை. ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வர புடினும், ஜெலன்ஸ்கியும் நேரடியாகச் சந்தித்துப் பேச வேண்டும்.

ஜெலன்ஸ்கியின் பிடிவாதப் போக்கை இனியும் தொடரவிடப்போவதில்லை. உக்ரைன் எல்லா வகையிலும் ஒரு துணிச்சலான தேசம் என்பதையும் பதிவு செய்கிறேன். உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வர புடின் விரும்புகிறார்.

அவர் ஒரு ஒப்பந்தம் செய்ய விரும்புகிறார்" என்று குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை, உக்ரைனுக்கான ஆதரவு நிலையில் ட்ரம்ப் விலகிச் செல்வதையடுத்து ஐரோப்பா தலைவர்கள் கூடி ஆலோசனை நடத்தி இருந்தனர்.

இதுதொடர்பாக ட்ரம்ப் கூறும்போது, உக்ரைன் போரை நிறுத்த இங்கிலாந்துப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மரும், பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரானும் எதுவும் செய்யவில்லை எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே இந்த இரு தலைவர்களும் அடுத்த வாரம் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இஸ்ரே

# ஈரான்



ஈரான் இராணுவமான புரட்சிகரப் படையின் தளபதி இப்ராஹிம் ஜபாரி "ஒபரேஷன் ட்ரூ பிராமிஸ் 3" என்ற பெயரில் இஸ்ரே

# கார் ரேஸில் மீண்டும் விபத்து உயிர்தப்பிய அஜித்



(வாலெண்சியா)

ஸ்பெயினில் நடந்து வரும் கார் ரேஸில் பங்கேற்ற அஜித்தின் கார்விபத்துக்குள்ளானது. இதில்அவர் அதிஷ்டவசமாக உயிர்தப்பினார்.

விடாமுயற்சி படத்திற்குப் பிறகு நடிகர் அஜித்தின் குட் பேட் அக்லி படம், வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வெளியாக உள்ளது. சினிமாவில் நடித்து வந்த அஜித், கடந்த சில தினங்களாக கார் ரேஸில் ஆர்வம் காட்டி வருகிறார். அண்மையில் டுபாயில் நடந்த கார் ரேஸில் அஜித்தின் அணி 3ஆவது இடத்தை பிடித்தது. இந்தக் கார் ரேஸில் அஜித்தின் கார் விபத்துக்குள்ளானது. அதில் காயமின்றி அவர் தப்பினார்.

இதைத் தொடர்ந்து, ஸ்பெயினின் வாலெண்சியா நகரில் நடந்த கார் ரேஸில் அஜித் கலந்து கொண்டார். கடந்த சில தினங்களாக பயிற்சியில் ஈடுபட்டு வந்த அவர் தற்போது கார் ரேஸில் பங்கேற்றார். கார் ரேஸின் போது குறுக்கே வந்த ஒரு காரால் அஜித் ஓட்டிச்சென்ற கார் விபத்துக்குள்ளானது. இதில் அவரது கார் 3 முறை சுழன்றடித்தது. இருப்பினும், அவர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார். லேசான காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

அஜித்தின் கார் விபத்துக்குள்ளான வீடியோ சமூக வலைத் தளங்களில் பரவி வரும் நிலையில், அதனை பார்க்கும் அஜித் ரசிகர்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். (நி-8)

# விண்வெளியிலிருந்து பூமியில் உள்ளோரின் முகங்களை பார்க்கும் கமரா அறிமுகம்

(பீஜிங்)

விண்வெளியில் இருந்து பூமியில் உள்ளோரின் முகங்களை அடையாளம் காணும் அதி திறன் கொண்ட, உலகின் மிக சக்திவாய்ந்த உளவு கமராவை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.


உலகளாவிய கண்காணிப்புத் திறன்களை மறுவரையறை செய்யக்கூடிய சக்திவாய்ந்த லேசர் அமைப்புடன் சீன விஞ்ஞானிகள் ஆப்டிகல் இமேஜிங் தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

மேம்பட்ட இந்த இமேஜிங் சாதனம் 100 கிலோமீற்றர் (62 மைல்) தொலைவில் இருந்து மில்லிமீற்றர் அளவிலான விபரங்களைப் படம்பிடிக்கும் திறன் கொண்டது. இது உளவுத் துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)



# இர

# மா



ரேலீ சி
மாக சந்தி
நிறம் ஏற்ப

மார்ச் மா
கின்ற மு
கணம் சிவ
இருக்கப்பே
blood m
றார்கள்.

பூமி சூ
முழு நில
யில் இரு
முழுச் சந்
ஏற்படுகிற
யலில் சூ
சூரிய அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேலை தரைமட்டமாக்குவோம்

## ன் அறிவிப்பால் பதற்றம்!



**(டெஹ்ரான்)**

**இஸ்ரேல் நகரங்களை சரியான நேரத்தில் தரைமட்டம் ஆக்குவோம் என ஈரான்இராணுவ புரட்சிகரப் படையின் தளபதி இப்ராஹிம் ஜபாரி தெரிவித்துள்ளமை மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர்ப்பதற்றத்தை உருவாக்கியுள்ளது.**

லுக்கு எதிராகத் தாக்குதல் நடவடிக்கையில் இறங்க உள்ளதாக அறிவித்துள் ளார்.

"இந்த நடவடிக்கை சரி யான நேரத்தில் துல் லியமாக இஸ்ரேலை அழிக்கும் டெல் அவிவ் மற்றும் ஹைபா நகரங்களை தரை மட்டமாக்குவோம்" என அவர் தெரிவித்துள் ளார்.


இதற்குப் பதிலடி தந் துள்ள இஸ்ரேல் வெளி யுறவு அமைச்சர் கிடி யோன் சார், "நம்மை அழிப்பதே தன் குறிக் கோள் என்று எதிரி கூறினால், அதை நம்ப வேண்டும் என்பதை யூத மக்களாகிய நாம் வரலாற்றிலிருந்து கற்றுள்ளோம்.

நாங்கள் பதிலடி தரத் தயாராக உள்ளோம் என் றார்.

இரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ள இந்த வார்த் தைப்போர் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மீண்டும் பதற்றத்தை அதிகரித் துள்ளது. (நி-8)

# ரத்த நிறமாக

## றும் சந்திரன்



சிதறல் காரண திரனில் சிவப்பு படுகிறது.

மாதம் வர இருக் முச் சந்திரகிர வப்பு நிலாவாக போகிறது. இதை moon என்கி

சூரியனுக்கும் வுக்கும் இடை ருக்கும்போது ந்திர கிரகணம் றது. இயற்பி ரிய உதயம், ஸ்தமனத்தின் போது சூரியன் எப்படிச் சிவப்பு நிறமாக காட்சி அளிக்கிறதோ அதே கோட்பாட்டைக் கொண்டு தற்பொழுது வர இருக்கும் சந்திர கிரகணமும் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும்.

ரேலீ சிதறல் கார ணமாக சந்திரனில் சிவப்பு நிறம் ஏற்படுகி றது.

அதாவது, சந்திரனை அடையும் ஒளியானது பூமி யின் வளி மண்ட லத்தின் வழியாக ஒளி விலகல் செய்யப்படுவதால் சந்திரன் சிவப்பு நிறமாக மாறும்.

இது குறுகிய அலை நீளங்களை வடிகட்டி நீண்ட அலைநீள சிவப்பு நிறங்களை மட்டுமே விட்டுச்செல்கிறது.

அதனால் நிலவானது சிவப்பு நிறத்தில் காட்சி யளிக்க இருக்கிறது.

2022 ஆம் ஆண்டுக் குப் பிறகு முதல் முறை யாகப் பூமிக்கு முழு சந்திர கிரகணம் வரு கிறது. இது எதிர்வரும் மார்ச் 13, 14 ஆம் திகதிகளில் இரவு வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா பகுதியில் தெரியக்கூடும். இந்த கிரகணம் சுமார் 5 மணி நேரம் வரையில் நீடிக் கும் என்கிறார்கள்.

இந்த வானியல் நிகழ் வினைப் பார்ப்பதற்கு பல வானியல் நிறுவனங்கள் மற்றும் ஆய்வகங்கள் குறிப்பிடத்தக்க வான நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்புச் செய்யத் திட்ட மிட்டுள்ளன. (நி-8)

# சிறை செல்ல ஆசைப்படும் ஜப்பான் முதியவர்கள்

(டோக்கியோ)

ஜப்பானில் உள்ள முதியோர்கள் தாங்கள் சிறப்பாக வாழ்வதற்காக வேண்டுமென்றே குற்றங்களைச் செய்துவிட்டு சிறைகளில் வாழ்வதாகத் தகவல் வெளியாகி உள்ளது. ஜப்பா னின் மிகப்பெரிய பெண்கள் சிறையாக டோச்சிகி சிறை கருதப்படுகிறது. இது, டோக்கியோவிற்கு வடக்கே அமைந் துள்ளது. இங்கு, கிட்டத்தட்ட 500 கைதிகள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வயதானவர்களாக உள்ளனர்.

இங்குள்ள பெண் கைதிகளில் சிலர் "நாங்கள் பொருளாதார ரீதியாக நல்ல நிலைமையில் வாழ முடியவில்லை. குறிப்பாக பிள்ளைகளால் அடிக் கடி வீட்டைவிட்டு வெளியேற் றப்படுகிறோம். உணவும் கிடைப்ப தில்லை. உடல் நலத்திலும் அக்கறை கொள்வதில்லை.

இதன் காரணமாகவே ஏதாவது ஒரு தவறைச் செய்துவிட்டு சிறைக்கு வந்து விடுகிறோம். சிறையில் இருந்து திரும்பினாலும், மீண்டும் தவறு செய்து விட்டு உள்ளே வருகி றோம்.

இங்கு அனைத்து உதவிகளும் கிடைக்கப் பெறுகிறது. நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்கள் என அவர்கள் தெரிவித்ததாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட முதியவர்கள் வசிக்கும் 200 நாடுக ளில் ஜப்பான் முதலிடத்தில் உள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை-மனித மோதலை தடுக்க நடவடிக்கை

## சுற்றாடல் அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் தொடரும் யானை-மனித மோதல்களுக்கு நிரந்தர மற்றும் விஞ்ஞான பூர்வமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான நான்கு வருட காலப் பகுதியில் காட்டு யானைகள் தாக்கியதில் 1578 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் யானைகளின் தாக்குதல் காரணமாக 739 பேர் மரணமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நான்கு வருடங்களுக்குள் 2018 யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில் தமிழரசுக் கட்சி எம்.பி ஸ்ரீநேசன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மின்சார வேலிகளை அமைத்தல், யானைகள் உள்வரும் பகுதிகளில் காவலரண்களை உருவாக்கி யானைகளை துரத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல், யானைகள் செல்லும் வழிகளை இனங்கண்டு முறையாக அதனை அமைத்து அவற்றுக்கு வாய்ப்பளித்தல், யானை- மனிதர் மோதல்களை தடுப்பதற்கு தேவையான பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் ஆகியவற்றை பின்பற்றுவதன் மூலம் யானைகளால் எதிர்கொள்ள நேரும் பாதிப்புகளையும் அழிவுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200-250 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 1300 | 1200 | 1100-1200 | 1300 |
| தக்காளி | 120 | 150 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 260 | 250 | 200-250 | 200 |
| கோவா | 300 | 300 | 280 | 400 |
| கரட் | 700 | 1000 | 620 | 800 |
| பூசணி | 140 | 120 | 100 | 200 |
| புடோல் | 250 | 150 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 150 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 190 | 200 | 155 | 200 |
| பாகற்காய் | 400 | 600 | 300-400 | 600 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250-300 | 500 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 400 | 350 | 270 | 400 |
| பீற்றூட் | 220 | 300 | 140 | 300 |
| கறிமிளகாய் | 700 | 600 | 400-600 | 1000 |
| முருங்கைக்காய் | 2500 | 2000 | 1500-2500 | 2000 |
| போஞ்சி | 250 | 400 | 150-250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 180 | 250 |
| கீரை - 1 பிடி | 50 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 250 | 200 | 200-250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 240 | 250 | 150-250 | 230-280 |
| இராசவள்ளி | 500 | 600 | 400-500 | 400 |
| வெங்காயப்பூ | 100 | 200 | 40-80 | 200 |
| முள்ளங்கி | 120 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 90 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 100 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 100 | 150 |

## இன்று ஒரு தகவல் 328

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# நடக்கலாமா?

காலை நேரம், கடற்கரை ஓரம் காலை வீசிக் கொண்டு கையை வீசிக்கிட்டு ஏதோ சண்டைக்குப் போற சிப்பாய் மாதிரி எல்லோரும் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார்கள்.

அதிலே எனக்குத் தெரிந்த ஒருத்தர் எதிரிலே வந்தார். மிகவும் வேகமாக.

என்ன சேர்! வாக்கிங்கா என்று கேட்டேன்.

அவராலே ஆமாம் என்று பதில் சொல்ல முடியவில்லை சேர்.. அவ்வளவு கஷ்டம்!மூச்சு விடுவதற்கே வாயைத் திறந்து திறந்து மூடிக் கொண்டிருந்தார். எங்கே பேசுவது.கொஞ்சம் நின்று நிதானமாக மூச்சு விட்டுவிட்டு அதற்குப் பின்பு சொன்னார். ஆமாம் என்று.

என்ன சேர் இவ்வளவு வேகம்? என்றேன்.

உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு தான் சேர் நடக்க அரம்பித்தேன். ஒரு நாள் இன்று ஒரு தகவலிலே கேட்டேன். நடக்கிறது நல்லது என்று அன்றில் இருந்து நடக்க ஆரம்பித்துவிட்டேன். ஆனாலும் மிகவும் கஷ்டமாக இருக்கு சேர். இப்ப பாருங்கள். உங்களிடம் சுலபமாக பேச முடியவில்லை. மூச்சு வாங்குது. உடம்பு கூட வலிக்கிறமாதிரி இருக்கு! அப்படி என்றார்.உங்களை யாரு சேர் இவ்வளவு வேமாக நடக்கச் சொன்னது? வேகத்தைக் குறையுங்கள்.மெதுவாக நடவுங்கள் என்றேன்.

நீங்கள் நடக்கிறதினாலே என்னென்ன சௌகரியம் என்று அன்றைக்கு சொன்னீர்களே தவிர சௌகரியமாக நடக்கிறது எப்படி என்று சொன்னீர்களா சேர்? என்றார் அவர் லேசாக மூச்சு வாங்கிக் கொண்டே மூச்சுவாங்கிக் கொண்டே சொன்னால் கூட இவர் சொல்றதிலேயும் ஒரு நியாயம் இருக்கு. அதனாலே வாக்கிங் போகிறவர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கியமான குறிப்புக்கள் என்னென்ன என்பதை இன்றைக்கு தெரிந்து கொள்ளலாம்.

உங்கள் வயசு 40 இற்கு மேலேயா? உங்கள் எடை இருக்க வேண்டியதைவிட 10 கிலோ அதிகமாக இருக்கா? நீங்கள் புகைப் பிடிக்கிறவரா? இதய நோய், இரத்த நாள நோய், உயர் ரத்த அழுத்தம் இப்படி ஏதாவது உங்களுக்கு உண்டா?

அப்படி என்றால் நீங்கள் உங்கள் இஷ்டத்திற்கு வரிந்து கட்டிக் கொண்டு வாக்கிங் போக ஆரம்பித்துவிடாதீர்கள். முதலிலே ஒரு மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள். அது தான் நல்லது. நடக்கிறபோது, உடற்பயிற்சி செய்கின்ற போதே மார்புப் பகுதியிலே அல்லது வேறு எங்கேயாவது தொடர்ந்து வலி இருந்தால் பயிற்சியை நிறுத்திவிட்டு வைத்தியரைப் போய்ப்பாருங்கள்.

வாக்கிங் போறபோது உங்கள் சக்திக்குத் தகுந்த மாதிரி மெதுவாக அதிக கஷ்டமில்லாமல் முன்னேறுங்கள் சேர். அங்கே என்ன போட்டியா வைக்கிறார்கள். முந்திக் கொண்டு போய் பரிசு வாங்குவதற்கு. தொந்தரவு கொடுக்காத ஷு, ட்ரெஸ் இவற்றை உபயோகப்படுத்துங்கள்.

பாதத்திலே உள்ள தசையிலே ஏதாவது பிரச்சினை இருந்தால் வைத்தியரைப் பாருங்கள்.

வெயில் காலமாக இருந்தால் தலைக்குத் தொப்பி வைத்துக் கொள்ளுங்கள். பனியிலே நடந்தாலும் அப்படித்தான். தலையைப் பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள். எங்களிடம் ஏதோ கொஞ்சம் உருப்படியாகத் தெரியிறது அது தான். உடற்பயிற்சிக்கு முன்பு, பின்பு, பயிற்சி செய்கின்ற போது நிறைய தண்ணீர் குடிக்கலாமாம்.

முதல் ஒரு மாதத்திற்கு கொஞ்சம் தளர்த்தியா. சாவகாசமாக நடக்கலாம். மணிக்கு 3 அல்லது 4 கிலோமீற்றர் வேகம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிற்கு வேகத்தை அதிகப்படுத்தலாம். மணிக்கு 6 அல்லது 8 கிலோ மீற்றர் அளவுக்கு நடக்கலாம். நல்லா கையை வீசிக் கொண்டு நடக்க வேணும். மூச்சுவிடுகின்ற எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். இது மாதிரி ஒரு 30 நிமிடம் நடக்கலாம்.

தனியாக நடந்து போவதற்கு உங்களுக்கு வெட்கமாக இருக்கிறதா? கூட யாரையாவது சேர்த்துக் கொள்ளுங்கள். ஒரு குழுவாகக் கூடப் போகலாம். நடக்கிறதை ஒரு சந்தோஷமான சமாச்சாரமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.தினம் இப்படி நடக்க வேண்டியிருக்கே என்று புலம்பிக் கொண்டே போகாதீர்கள்.சில பேர் நடக்கிறபோது கடந்த காலத்தை அசை போட்டுக் கொண்டே போவார்கள். சில பேர் வருங்காலத்தை அசைபோட்டுக் கொண்டே போவார்கள். சிலபேர் முக்கியமான திட்டமெல்லாம் இப்படி நடக்கிறபோது தான் தீர்மானம் செய்கின்றார்கள்.

நடக்கிறதினாலே மன இறுக்கம் குறையுது. பரபரப்பு குறைகிறது. மன ஆற்றல் பெருகுது. தன்னம்பிக்கை வளர்கிறது. முதுமை தள்ளிப் போகிறது. செயற்றிறன் அதிகரிக்கின்றது. இதைத் தவிர உடம்புக்கும் பலவிதமான சௌகரியங்கள் ஏற்படுகின்றது.


சார்லஸ் லேம்ப்-ஆங்கில இலக்கிய மேதை. அவர் ஒருதரம் உடம்பு சரியில்லை என்று வைத்தியரிடம் சென்றாராம். வைத்தியர் அவரைப் பார்த்துவிட்டு நீங்கள் தினமும் காலையிலே வெறும் வயிற்றிலே நடக்க வேணும் அப்படி என்றாராம்.வெறும் வயிற்றிலே நடக்கிறதற்கு நான் தயார் ஆனால் வயிறு கிடைக்கவேணுமே. யார் வயிற்றிலே நடக்கிறது வைத்தியர் என்று கேட்டாராம் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் புரிபவர்கள்

## சட்டத்தின் முன்நிறுத்தப்படுவார்கள்

## அமைச்சர் சந்திரசேகர்



(கிளிநொச்சி)

**நாடு முழுமையாக சுத்தம் செய்யப்பட வேண்டும் என்றால் குப்பைகளை அப்புறப்படுத்தல் மாத்திரம் அல்ல. இனவாதம், மதவாதம், ஊழல், மோசடிகளுக்கும் முடிவு கட்ட வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை கடற்கரையை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் நேற்று "அழகான கடற்கரையின் பங்குதாரர் களாவோம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் சூழலை சுத்தப் படுத்துவது போல் எமது ஆட்சியின் கீழ் ஊழல் வாதிகள், மோசடியாளர்கள், கடத்தல் காரர்கள், கொலைகாரர்கள் ஆகியோரை சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதி தேவதை மூலம் சுத்தம் செய்யப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு, தெற்கு மலையகம் அனைத்து பகுதிகளிலும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கபடவுள்ளதாக தெரிவித்தார். (6-8)

# ஆசிய குத்துச் சண்டை போட்டிக்கு வவுனியாவை சேர்ந்த ஐவர் தகுதி



(வவுனியா)

நடைபெறவுள்ள ஆசிய குத்துச்சண்டை போட்டிக்கான தெரிவுப்போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஐவர் தகுதி பெற்றுள்ளனர்.

22 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களிற்கான தகுதிகாண் போட்டியானது கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற்றிருந்தது.

இதேவேளை விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவுக்கும் வவுனியா மாவட்ட குத்துச்சண்டை கழகங்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது.

வருங்காலங்களில் போட்டியின் போது வரும் வீரர்களுக்கான தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும் என அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த போட்டியிலே நிக்சன் ரூபராஜ்ஜின் பயிற்சியின் கீழ் வவுனியா மாவட்ட குத்துச்சண்டை கழகம் மற்றும் ஒமேகா லைன் குத்துச்சண்டை கழகம் ஆகியன வவுனியா மாவட்டம் சார்பாக கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# சுத்தமான கடற்கரை

## கவர்ந்திழுக்கும் சுற்றுலாத்தளம்

### வேலைத்திட்டம் முல்லையில் முன்னெடுப்பு



(நெளுக்குளம்)

"சுத்தமான கடற்கரை - கவர்ந்திழுக்கும் சுற்றுலாத்தளம்" எனும் தொனிப் பொருளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுமார் 20 கடற்கரை பிரதேசங்களில் தூய்மைப்படுத்தும் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அளம்பில் வடக்கு , அளம்பில் தெற்கு பகுதி கடற்கரையை சுத்தம் செய்யும் பணி நேற்று இடம்பெற்றது.

அளம்பில் வடக்கு, தெற்கு கிராம சேவையாளர்கள், அளம்பில் வடக்கு,தெற்கு கிராம சேவையாளர்கள், அளம்பில் வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், அளம்பில் தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், ஸ்ரீலங்கா சிங்க ரெஜிமண்ட் 10 ஆவது படையணியின் இராணுவ அதிகாரி மற்றும் இராணுவத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தூய்மைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். (6-8-299)

# புகையிரத நிலையங்களை அழகுபடுத்தும் செயற்பாடு



(குருமன்காடு)

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் றொபேர்ட் பேடன் பவல் பிரபுவின் 168 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இலங்கை சாரண சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளையின் சாரணர்கள் வவுனியாவிலுள்ள புகையிரத நிலையங்களை அழகுபடுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் வவுனியா , தாண்டிக்குளம் , ஓமந்தை,புளியங்குளம் மற்றும் செட்டிக்குளம் ஆகிய புகையிரத நிலையங்களில் அழகுபடுத்தும் செயற்பாடுகளில் வவுனியா சாரணர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

இந்நிகழ்வில், வவுனியா புகையிரத திணைக்கள அதிபர் சி.அகிலேஸ்வரன், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் உதவி ஆணையாளர் எஸ்.மயூரன், மாவட்ட சாரணர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், திரி சாரணர்கள், சமாதானத்திற்கான தூதுவர் குழுவினர், பொறுப்பாசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8-[illegible])

# வெண் ஈ தாக்கத்தினால் தென்னை செய்கை பாதிப்பு

## தேங்காய்க்கு அதிக கிராக்கி

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் வெண் ஈயின் தாக்கம் பருவ மழையின் பின்னர் சடுதியாக பல பகுதிகளில் அதிகரித்துள்ளதாக தென்னை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக தென்னைச் செய்கையில் பெறப்படும் தேங்காயின் விளைச்சலில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாக தென்னைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வெண் ஈ தாக்கத்தினைக் கட்டுப்படுத்த பல தடவைகள் மருந்துகள் விசிறப்பட்ட போதிலும் எவ்வித பிரயோசனமும் ஏற்படவில்லை. குறித்த தாக்கத்தினால் தென்னை செய்கையில் இருந்து பெறப்படும் தேங்காயின் விளைச்சல் பாரிய சரிவினை சந்தித்துள்ளது.

இதன் காரணமாக தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன் சந்தையில் தேங்காயினை கொள்முதல் செய்ய முடியாத நிலையில் வியாபாரிகளும், அதிக விலை கொடுத்து தேங்காய் வாங்கும் நிலைக்கு பொது மக்களும் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 709





அடிக்கடி அக் காட்சிகளைப் பார்த்த பிறகு பொன்னியின் செல்வன் வானவரின் நாட்டுக்குத் தான் வந்து விட்டதாகவே எண்ணினான். அந்தத் தேவ யட்ச கின்னரர்கள் எல்லாரும் தன்னை வரவேற்க வருவதாகவும் எண்ணினான். சொர்க்கலோகத்துக்குத் தான் வந்து சேர்ந்தது எப்படி என்று யோசித்தான்.

அடர்த்தியான தாழைப் புதர்களும், அத்தாழைப் புதர்களில் பூத்திருந்த தங்கநிறத் தாழம்பூக்களும் இருபுறமும் நிறைந்திருந்த ஓடையின் வழியாக வான நாட்டுக்குத் தான் வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. அந்த ஓடை வழி நினைவு வந்த போது தாழம்பூக்களிலிருந்து வந்த நறுமணத்தையும் அவன் நுகர்வதாகத் தோன்றியது. ஓடையில் ஒரு படகில் ஏற்றித் தன்னை ஒரு தேவகுமாரனும் தேவகுமாரியும் அழைத்து வந்ததும் இலேசாக நினைவு வந்தது. தேவகுமாரன் சிவபக்தன் போலிருக்கிறது. இனிமையான தேவாரப் பாடல்களை அவன் அடிக்கடி பாடினான். தேவகுமாரி என்ன செய்தாள்? அவள் பாடவில்லை. அவள் அவ்வப்போது இரண்டொரு வார்த்தைகள் மட்டுமே கூறினாள். அதுவே தேவகானம் போலிருந்தது. ஆர்வமும் அன்பும் நிறைந்த கண்களால் தன்னை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்விருவரும் இப்போது எங்கே?

வானவர் நாட்டில் தேவர்கள் யக்ஷர்கள், கின்னரர்களைத் தவிர புத்த பிக்குக்களுக்கும் முக்கியமான இடம் உண்டு போலும்! அவர்கள் தான் தேவலோகத்து அமுத கலசத்தைப் பாதுகாக்கிறவர்கள் போலும்! அடிக்கடி புத்த பிக்கு ஒருவர் அவனை நெருங்கி வருகிறார். அவனுடைய வாயில் சிறிது அமுதத்தை ஊற்றி விட்டுப் போகிறார். தேவலோகத்தில் மற்ற வசதிகள் எவ்வளவு இருந்தாலும், தாகம் மட்டும் அதிகமாகவே இருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாகவே இந்தப் புத்த பிக்கு தன் வாயில் அமுதத்தை ஊற்றி விட்டுப் போகக் கூடாதோ? தேவலோகத்தில் கூட ஏன் இந்தத் தரித்திர புத்தி!

ஒருவேளை அமுதத்தை ஒரேயடியாக அதிகமாய் அருந்தக் கூடாது போலும்! இது அமுதமா? அல்லது ஒரு வேளை ஏதேனும் மதுபானமா? சீச்சீ பிக்குக்கள் கேவலம் மது வைக் கையினாலும் தொடுவார்களா? தன் வாயிலேதான் கொண்டு வந்து ஊற்றுவார்களா? இல்லையென்றால், ஏன் இப்படித் தனக்கு மயக்கம் வருகிறது? அமுத பானம் செய்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஏன் நினைவு குன்றுகிறது?

மூன்று தினங்கள் இவ்வாறு பொன்னியின் செல்வன் வானவர் உலகத்திலும் நினைவேயில்லாத சூனிய உலகத்திலும் மாறி மாறிக் காலம் கழித்த பிறகு, நாளாம் நாள் காலையில் தூக்கத்திலிருந்து விழித்தெழுவது போல எழுந்து, பூரண சுய நினைவு பெற்றான். உடம்பு பலவீனமாய்த் தானிருந்தது ஆனால் உள்ளம் தெளிவாக இருந்தது. எதிரே சுவரில் இருந்த உருவங்கள் சித்திர உருவங்கள் என்பதை அறிந்தான்.


அந்தத் தேவயக்ஷ கின்னரர்கள் தன்னை வரவேற்பதற்காக அங்கே நிற்கவில்லை யென்றும், தேவலோகத்துக்கு விஜயம் செய்த பகவான் புத்தரை வரவேற்கிறார்கள் என்றும் அறிந்தான். மற்றொரு சுவரில் மேகங்கள் சூழ்ந்த வான வெளியில் புத்த பகவான் ஏறிவருவது போன்ற சித்திரம் எழுதியிருந்ததையும் கண்டான். புத்த விஹாரம் ஒன்றில் தான் படுத்திருப்பதை அறிந்து கொண்டான். எங்கே, எந்தப் புத்த விஹாரத்தில் என்று சிந்தித்த போது இலங்கையிலிருந்து தான் பிரயாணம் தொடங்கியதிலிருந்து நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவு வந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மாடும் புலியும்



முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில ஒரு மாடு ஒன்றுஇருந்தது. அந்த மாடு எல்லோருடனும் நட்பாகவும் ரொம்ப உதவி செய்யும் குணத்துடனும் பழகி வந்தது. அது தன் முதலாளி பேச்சைக் கேட்டு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. ஒரு நாள் அந்த மாடு காட்டுக்குச் சென்று புற்களை சாப்பிட்டு கொண்டு இருந்தது.

அப்போது ஒரு புலி அந்த மாட்டைப் பார்த்து அதை வேட்டையாட நினைத்தது. புலி தன்னைத் தாக்க வருவதைக் கவனித்த மாடு ரொம்ப அமைதியாக பயத்தை விட்டு புலியிடம் பேசத் தொடங்கியது.

"புலியாரே! எனக்கு ஒரு கன்றுக்குட்டி இருக்கு. அது இரண்டு வாரங்களுக்கு முன்பு தான் பிறந்தது. அதற்குப் புல்லை எப்படிச் சாப்பிட வேண்டும் என்று கூடத் தெரியாது. நான் திரும்பிப் போகவில்லை என்றால் அவனால் பால் குடிக்க முடியாது.

அதனால் நீங்கள் அனுமதி கொடுத்தால் அவனுக்கு நான் போய் பால் கொடுத்துவிட்டு திரும்பி இங்கே வந்து விடுவேன். அப்புறம் நீங்க என்னை சாப்பிடலாம்" என்றது.

மாடு சொன்னதைக் கேட்டுப் புலி சத்தமாகச் சிரித்துவிட்டு சொன்னது "என்னிடம் இருந்து தப்பித்துச் செல்ல நீ பொய் சொல்கிறாய். நான் முட்டாள் என்று நீ நினைக்கிறாயா!" என்றது மூர்க்கமான புலி.

அதற்கு மாடு புலியிடம் மிகவும் கெஞ்சிக்கேட்டது. இல்லை நான் பொய் சொல்லவில்லை பொய் சொல்வதை விட செத்தே போய் விடலாம். எல்லோரும் ஒரு நாள் செத்துத் தான் போக வேண்டும்.

இன்றைக்கு உங்கள் பசிக்கு கண்டிப்பாக நான் உணவாக இருப்பேன். தயவு செய்து என்னை ஒரு முறை போக விடுங்கள். நான் என் குழந்தைக்கு பால் கொடுத்துவிட்டு உடனே திரும்பி வந்து விடுகிறேன். இது தான் என் கடைசி ஆசை" என்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதார பிறருக்குச் செய்யும் உதவி பல மடங்கு பலனாக வந்து சேரும்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் மக்களுக்கான நீதியை ஐ.நாவில் நிலைநிறுத்துங்கள்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு ஜெனிவா செல்கிறது.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு கடந்த கால ஆட்சியாளர்கள் இழைத்த குற்றங்கள், கொடுமைகள் கொஞ்சமல்ல.

அதிலும் தமிழ் மக்களைக் கொன்று குவித்து மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்த நிட்டூரம் உலகம் அறிந்த உண்மை.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டதுமான போர்க்குற்றங்கள் இன்னமும் நீதியின்றிக் கிடக்கின்றன.

இது தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை தனது கூட்டத்தொடர்களில் பிரஸ்தாபிக்கின்ற போதிலும் இலங்கை அரசின் பிரதிநிதிகள் அவற்றை நிராகரிப்பதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவும் கூற,

மீண்டும் கால அவகாசம் வழங்குகின்ற சம்பிரதாயத்தோடு எங்களின் பிரச்சினை கடந்து போகும். இதுவே வழமை.

ஆனால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்கின்றவர்கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசின் பிரதிநிதிகள்.

பொதுவில் ஜனாதிபதி அநுர மீது தமிழ் மக்கள் மிகுந்த மதிப்பும் நம்பிக்கையும் வைத்துள்ளனர்.

இதற்குக் காரணம் கடந்த காலங்களில் பேரினவாத ஆட்சியாளர்கள் நடந்ததுபோல ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க செயற்படமாட்டார் என்பதும் அவர் உண்மைக்காக – நீதிக்காக – உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பார் என்பதுமே காரணமாகும்.

இவ்வாறாகத் தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுர மீது நம்பிக்கை கொள்வதற்கு இன்னுமோர் காரணமும் உண்டு.

அதாவது இந்த உலகில் ஈழத் தமிழ் மக்கள் அநாதைகள். அவர்களுக்காக எந்த நாடும் குரல் கொடுக்கப் போவதில்லை.

இதற்கும் மேலாக, முன்னர் தமிழ் மக்கள் நம்பி வாக்களித்து, யாரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்களோ அவர்கள் தமிழ் மக்களின் உரிமைக்காக – அவர்களுக்கு நடந்த கொடுமைக்காகக் குரல் கொடுக்காமல், ராஜபக்ஷ அரசாங்கத்தோடும் அதற்குப் பின்பான ஆட்சித் தரப்புடனும் சேர்ந்து அரசாங்கத்துக்குக் கால அவகாசம் கொடுப்பதற்கு ஆதரவு வழங்கினர்.

கூடவே எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்று சுகபோகம் அனுபவித்தனர்.

இத்தகைய நயவஞ்சகத்தனத்தின் மத்தியில், ஜனாதிபதி அநுரவை ஆதரிப்பதும் எமது பிரச்சினை தொடர்பில் அவரை அணுகுவதுமே சாலச் சிறந்தது எனத் தமிழ் மக்கள் முடிவு செய்தனர்.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு போர்க்குற்றம் இழைக்கவில்லை என ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் அநுரவின் அரச பிரதிநிதிகள் கூறுவார்களாயின், அதைவிட்ட ஏமாற்றமும் வேதனையும் தமிழ் மக்களுக்கு வேறு எதுவுமாக இருக்க முடியாது.

எனவே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வைத்து தமிழ் மக்களுக்கான நீதியை ஜனாதிபதி அநுர நிலைநிறுத்த வேண்டும். அதுவே தமிழ் மக்களின் நம்பிக்கைக்குச் செய்கின்ற கைமாறாகும்.

# இலங்கைக் கடற்படைக்கு எதிராக ■ ■ ■ இராமேஸ்வரம் மீனவர்கள் போர்க்கொடி

*(இராமேஸ்வரம்)*

இராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்குச்சென்ற 32 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம் மீன்பிடித்துறைமுகம் அருகே நடைபெற்ற மீனவ சங்கங்களின் அவசர ஆலோசனைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

மன்னார் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 32 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களை விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கையில் தமிழக மீனவர்களின் படகுகள் ஏலம் விடப்படுவதைத் தடுத்து படகுகளை மீட்க வேண்டும் எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று முதல் விசைப் படகு மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ந-7)

# 32 தமிழக மீனவர்கள் கைது ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கைக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட 32 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை சமீப காலங்களில் கவலையளிக்கக் கூடிய வகையில் அதிகரித்துள்ளது என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 32 மீனவர்களை அவர்களது 5 மீன்பிடி விசைப் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று தாம் பலமுறை கேட்டுக் கொண்ட போதிலும், இலங்கைக் கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் தொடர்வதாகவும் மு.க ஸ்டாலின் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7)

## புதுக்கடை நீதிமன்ற சூட்டுச்சம்பவம்

# துப்பாக்கிதாரியின் காதலி விடுவிப்பு

*(கொழும்பு)*

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரியின் காதலியிடம் வாக்கு மூலத்தைப் பெற்றதன் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவருடன் கைது செய்யப்பட்ட மற்றைய நபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை இச் சம்பவத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்ட மேலும் மூன்று சந்தேக நபர்களும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருவதாகக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ந-7)

# சிவாஜிலிங்கம் வைத்தியசாலையில்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் சுகவீனம் காரணமாக அவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# தேசிய பாதுகாப்பை அரசு கற்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சாட்டை

*(கொழும்பு)*

தேசிய பாதுகாப்புக் குறித்து பாடம் கற்பிக்க வந்த அரசாங்கம், தற்போது தேசிய பாதுகாப்பு குறித்துக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தெரணியகல பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் முன்னதாக தேசிய பாதுகாப்புக் குறித்து கற்றுக் கொள்வதற்கு மேசையினையும் நாற்காலியினையும் எடுத்து வருமாறு கூறினார்கள்.

ஆனால் அவர்களுக்குத் தற்போது தேசிய பாதுகாப்புக் குறித்துக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் சட்டம் மற்றும் அமைதியினை சீர்குலைக்கும் வகையில் மிலேச்சத்தனம் அதிகரித்துள்ளது.

நீதிமன்றத்தினுள் தாக்குதல் இடம்பெறுமானால் இங்கு கூறுவதற்கு வேறுஒன்றுமில்லை.

தேசிய பாதுகாப்புக் குறித்து இந்த அரசாங்கத்திடம் எவ்விதமான பதில்களோ தீர்வுகளோ இல்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலே நாட்டு மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு முழுமையான அதிகாரத்தை வழங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7)

# பயணப்பொதியிலிருந்து 123 தோட்டாக்கள் மீட்பு

*(பண்டாரவளை)*

பேருந்தொன்றின் பயணப் பொதிகள் வைக்கும் மேற்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பயணப்பை ஒன்றிலிருந்து 123 தோட்டாக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பயணப்பையில் சிறிய இரும்புப் பெட்டியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த பேருந்தொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை பண்டாரவளை பேருந்து நிலையத்திற்கு அருகில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பண்டாரவளை பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போதே 123 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த தோட்டாக்களில் 113 பிஸ்டல் தோட்டாக்கள், 9 T56 தோட்டாக்கள் மற்றும் T56 LMG தோட்டா ஒன்றும் காணப்பட்டுள்ளன.

குறித்த பயணப் பொதியின் உரிமையாளரான சந்தேக நபரைக் கைது செய்வதற்காகப் பண்டாரவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களின் பொலிஸ் பாதுகாப்பு தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக பொலிஸ் அதிகாரிகளை வழங்குவது குறித்து அரசாங்கம் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜே பால தெரிவித்துள்ளார்.

அதாவது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த நிலையில் இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு சபா நாயகர் அறிவித்திருந்தார்.

அதன்படி அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளிவந்திருந்தன.

இது தொடர்பாக ஊடகமொன்று, அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடம் வினவிய போது, "எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் இது தொடர்பாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து தொடர்புடைய கோரிக்கைகளைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிக்கை வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைகளை பரிசீலித்த பின்னர், தேவைப்பட்டால் மட்டுமே சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும், ஆளுங்கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் பாதுகாப்பு தொடர்பாக எந்த கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் அவர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளுக்கு பொலிஸ் நிலைய மட்டத்தில் விசேட பாதுகாப்புத் திட்டத்தை செயற்படுத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார். (நி-8)



யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வாரம் பாடசாலை மைதானத்தில் அதிபர் பொ.சிவசரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

# குழந்தையை பிரசவித்து ஜன்னலால் எறிந்த மாணவி

## மட்டக்களப்பில் கொடூரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தாம் பிரசவித்த குழந்தையை யுவதி ஒருவர் கழிப்பறையின் ஜன்னல் ஊடாக எறிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயர் தரத்தில் கல்விகற்று வரும் 18 வயதுடைய மாணவி ஒருவர் சம்பவ தினமான நேற்று அதிகாலை 3.20 அளவில் தாம் கர்ப்பிணி என்பதை தெரிவிக்காமல் வயிற்றுவலி எனக்கூறி சிகிச்சை பெறுவதற்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, ஆரம்ப சிகிச்சைப் பிரிவில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அதன்போது அதிகாலை 5 மணியளவில் குறித்த யுவதி கழிப்பறைக்குச் சென்று குழந்தையைப் பிரசவித்துள்ளார். பின்னர் அந்தக் குழந்தையை ஜன்னல் ஊடாக வெளியே எறிந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

எவ்வாறாயினும், குழந்தை ஜன்னலின் கீழ் உள்ள தளம் ஒன்றில் வீழ்ந்துள்ள நிலையில் அழுகுரல் கேட்டதையடுத்து தாதியர்கள் அங்கு சென்று குழந்தையை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட குழந்தை முதிரா குழந்தைகளுக்கான விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த யுவதி வைத்தியசாலையின் 31 ஆவது விடுதியில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8)

# அதிகரித்த வெப்பம் காரணமாக காட்டுத்தீ ஏற்படும் அபாயம்!

## அவதானத்துடன் செயற்படுமாறு சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை

(ஹற்றன்)

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் வறண்ட காலநிலை மற்றும் கடுமையான வெயில் காரணமாக மத்திய மலைநாட்டில் எந்த நேரத்திலும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என பொலிஸார், வன பாதுகாப்பு, வனவிலங்கு துறை அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் காடுகளில் விழும் வலுவான சூரிய ஒளி காரணமாக, அங்குள்ள தாவரங்கள் வெயிலால் எரிந்து எந்த நேரத்திலும் தீப்பிடிக்கும் நிலையில் உள்ளன.

மாத்தளை கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள பல இயற்கை காடுகளில் இந்த நிலைமை உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்டியின் மாத்தளை மாவட்டத்தின் எல்லையில் உள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரின் சில பகுதிகள், ஹந்தன மலைத்தொடர் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் எல்லையில் உள்ள ஹோட்டன் தன்ன ஆகியவை அதிக ஆபத்துள்ள நிலையில் உள்ளன.

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எந்த நேரத்திலும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் இருப்பதால், பொதுமக்கள் மற்றும் இந்த இடத்தை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸ், வனப் பாதுகாப்பு, வனவிலங்குத் துறை அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-8)

## அதிக விலைக்கு அரிசி விற்பனை

# 39 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த மற்றும் அரிசியை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் 39 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கேகாலை, கம்பஹா மாவட்டங்களில் இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (நி-8)

# விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்கல்வி தொடர்பில் விசேட கவனம்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளி சமூகத்தின் கல்வியை மேம்படுத்துவதற்காக மாற்றுத்திறனாளி சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்புடைய குழுவினருடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மற்றும் சர்வதேச விதிமுறைகளை கவனத்திற் கொண்டு விசேட தேவைகள் உள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்மொழிவை அவர்கள் முன்வைத்தனர்.

விசேட தேவையுடையவர்களின் உரிமைகளை வலுப்படுத்துதல், விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துதல் மற்றும் அவர்களுக்கான உயர்கல்வி நிலைகளை அறிமுகம் செய்தல் போன்ற பல விடயங்கள் குறித்து இந்த முன்மொழிவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மதியிறுக்கம் (ஓட்டிசம்) நோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்வியை உயர்த்துவதும், அந்தப் பிள்ளைகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் தற்போதைய அரசு 2025 வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை அவர்கள் பாராட்டினர். (நி-8)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய அரசியலமை...

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான 5ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமையைக் கண்டு அரசாங்கம் கலக்கமடையப் போவதில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களும், பெருந்தோட்ட மக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்கள். ஆகவே மக்களின் ஆணைக்கமையச் செயற்படுவோம்.

புதிய அரசியலமைப்புத் தொடர்பில் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். காலாவதியடைந்துள்ள இந்த அரசியலமைப்பை இரத்துச் செய்து மக்களின் விருப்பத்துடன், பொதுஜன வாக்கெடுப்புடன் புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கைக்கு அமைய இந்தச் சட்டம் இரத்துச் செய்யப்படும். அதேபோல் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றார். (ந-7)

## உள்ளூராட்சித்...

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையை நேற்று தரிசித்த பின்பு ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எந்தவித சட்டரீதியான தடைகளும் இல்லை.

தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படுமெனவும் நம்பிக்கை வெளியிட்டார். (ந-7)

## வேகக் கட்டுப்...

திச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளான நிலையில் மாவட்டச் செயலரின் மகனும் அவரது நண்பரும் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் கந்தர்மடம் சந்திக்கு அருகில் நேற்று மாலை வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியோரமாக இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது அருகில் உள்ள வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

விபத்தில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற மாவட்டச் செயலரின் மகன் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில், சாரதி இருக்கைக்கு அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த அவரின் நண்பர் கடும் காயங்களுக்குள்ளானதுடன், அவரது கால்கள் வாகனத்தினுள் சிக்குண்டமையால், சுமார் ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னரே அவர் வாகனத்தில் இருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,33)

## ஒன்பது தமிழ்க்...

கிழமை கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கக்கூடிய ஐந்து கட்சிகளும் தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், சமத்துவக் கட்சி மற்றும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்ட ஜனநாயக தமிழரசுக் கூட்டணி ஆகிய கட்சிகள் கூட்டாக இணைந்து ஓர் அணியாக உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

உள்ளூராட்சித் தேர்தலை தமிழ் மக்களின் முக்கியமான தேர்தலாக நாங்கள் கணிக்கிறோம். ஆகவே தமிழ் தரப்புக்கள் அனைத்தும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதற்காக நாம் ஒன்றிணைந்து தேர்தலில் நிற்கவுள்ளோம்.

அதற்காக தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க கூடியவர்களை ஒன்று இணைத்து வருகிறோம். நேற்றைய தினம் எம்முடன் இணையாதவர்கள் எதிர்காலத்தில் எம்முடன் இணைவார்கள் என நம்புகிறோம்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகச் சங்குச் சின்னத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவோம்.

வடக்குக் கிழக்கில் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்ய மாவட்ட மட்டத்தில் தெரிவுக்குழுவை நியமிப்போம்.

எம்முடன் இணைவது தொடர்பில் தமிழரசுக் கட்சியுடன் பேசியுள்ளோம். திட்டவட்டமான பதில் சொல்லவில்லை அவர்களுடன் பேச்சுக்களை நடத்துறோம்.

நேற்றைய கலந்துரையாடலில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பொ.ஐங்கரநேசன் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. ரவீந்திரா (வேந்தன்), தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் சபா குகதாஸ், ஜனநாயகத் தமிழரசுக் கட்சி சார்பில் க.நாவலன், மற்றும் சமத்துவக் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ந-7)

## துப்...

வெளிநாட்டிலிருந்து கொலையைத் திட்டமிட்ட கொமாண்டோ சலிந்த என்ற நபரை வட்ஸ் அப் மூலம் தொடர்பு கொண்டதாகப் பொலிஸார் தற்போது கண்டறிந்துள்ளனர்.

இதன்போது கொமாண்டோ சலிந்த, "நீவேலையைச் செய்" என்றார். வெளியே எல்லாம் சரி. பயப்படாதே. சுடு. எல்லாம் சாதகமாக வுள்ளது." பயப்படாமல் சுடு என குறிப்பிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், "உள்ளே பிரச்சினை இல்லையே?" "நான் உள்ளே இருக்கிறேன்" என்றார்.

"எதுவும் இல்லை. நீ ரெடியாகு சுடுவதற்கு" முடித்தே விடு. எல்லாம் சரியா இருக்கு" என்றார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், "அப்படியானால் பொலிஸார்?" என்று கேட்டார்.

காலை 9.48 மணிக்கு, கொமாண்டோ சலிந்த, "எல்லாம் சரியாக உள்ளது" நீ வேலையைச் செய் என்று கூறியுள்ளார்.

பின்னர், காலை 9.54 மணிக்கு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர், கொமாண்டோ சலிந்தவுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்திருந்தார்.

பின்னர் அவர், "அவன் இறந்துவிட்டானா?" என்று கேட்டார்.

"இறந்துவிட்டான்"என்று கொமாண்டோ சலிந்தவுக்கு துப்பாக்கிதாரி பதிலளித்தார்.

"அருமை" என்று பதிலளித்த பிறகு, கொமாண்டோ சலிந்த "நீ என் உயிர்" என்று பதிலளித்தார்.

"ஏன் இப்படிக் கூறுகிறீர்கள், நீங்கள் தான் எனக்கு உணவளித்து தந்தை போல் கவனித்தீர்கள். நீங்களே என் உயிர்" என துப்பாக்கிதாரி குறிப்பிட்டார்.

சகோதரி இன்னும் அங்கேயே தான் இருக்கிறாள். "நான் இங்கே இருக்கிறேன்," என்று துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 5756
Q 7 0 9 3 2 8
அத சம்பத Q 9 3 2 8
சீட்டிழுப்பு இலக்கம் 0331
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1786
A 19 26 63 81 A
Double Chance 79756

மெகா பவர்
திகதி 23/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2104
G 22 20 32 35 41

ஜய
திகதி 2025.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 024
Y 0 9 0 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3998
சீட்டிழுப்பு திகதி | 23.02.2025
H 12 21 76 77
H
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 1065
கும்பம் 07 18 58 62 கும்பம்
52271 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
23.02.2025
வெற்றி வாரம் 464
B 6 2 6 5 8 6
94490
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,727,255.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2730
சீட்டிழுப்பு திகதி 2025.02.23
தினம் ஞாயிற்றுக்கிழமை
24 29 59 67 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,083,468.00
DLB

சனிதா
திகதி 23.02.2025 வெற்றி வாரம் 4891
02 46 54 73 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,510,919.20
80934
DLB

சசிரி
வெற்றி வாரம் 629
சீட்டிழுப்பு திகதி 23.02.2025
ஞாயிற்றுக்கிழமை
18 29 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4442
சீட்டிழுப்பு திகதி 23.02.2025
தினம் ஞாயிற்றுக்கிழமை
03 06 10 24 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.14,006,951.20
246794
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 05 31 32 43 49
1906
23.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,324,517.00
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2556
சீட்டிழுப்பு திகதி 2025.02.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,187,118.40
02 14 55 56 B
347633
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (877)
076 825 7716 (ஆகாஸ்)

குடைச்சுவாமி சேவை நாடி ஜோதிடம்
அன்பானவர்களே
உங்களது வீட்டின் வாஸ்து பார்க்கவும், தீய சக்திகளை இனம் காணவும் சாதக பலன் பார்க்கவும் தொடர்பு கொள்ள அழைக்கவும்.
077 491 1975, 077 477 9925

மலிவு விலையில்
பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும். (C-2318)
076 315 6470

வேலையாட்கள் தேவை
யாழ்.நகரில் இயங்கும் பிரபல குளிர்பான நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
காசாளர் (ஆண், பெண்)
தொடர்பு : மு.ப 09.00 - பி.ப 05.30 (3480)
340C, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.
077 711 1410

## சூட்டுச்...

பொருளாதாரத்திலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவிசாவளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களின் ஊடாக அரசாங்கத்தின் இயலாமை வெளிப்படுத்தப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் பதிவாகும் போது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகியிருக்க வேண்டும். இரண்டு பௌர்ணமிகளுக்குள் பாதாள உலகக் குழுக்கள் முற்றாக அழிக்கப்படும் எனக் கூறிய இவர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பில் கற்பதற்கு கதிரைகளை எடுத்து வருமாறு எதிர்க்கட்சிகளை அழைத்தனர்.

இவ்வாறு மமதையில் இருந்ததால் தான் இன்று எதனையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று பொருளாதாரம் தொடர்பிலும் வாக்குறுதியளித்தனர்.

இந்தப் பிரச்சினைகளுக்கு இவர்களிடம் தீர்வு எதுவும் இல்லை. கடந்த அரசாங்கங்களில் இடம்பெற்ற சம்பவங்களும் தற்போது இடம்பெறும் சம்பவங்களுக்கும் எவ்வித மாற்றமும் இல்லை.

கடந்த ஆட்சிக் காலங்களிலும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். அதே நடைமுறையையே தற்போதைய அரசாங்கமும் பின்பற்றுகின்றது. எனினும் அன்றையதை விட இன்று பாதாள உலகக் குழுக்கள் வலுப்பெற்றுள்ளன.

நீதவான் முன்னிலையிலேயே சந்தேகநபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுமளவுக்குத் தேசிய பாதுகாப்பு மிகப் பாரதூரமான கேள்விக்குறிக்குள்ளாகியுள்ளது. இவ்வாறான நிலைமை சுற்றுலாத்துறையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார். (ந-7)

## 32 தமிழக மீனவர்கள்...

குற்றச்சாட்டில் 32 இந்திய மீனவர்கள் 5 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்பரப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

குறித்த இந்திய மீனவர்கள் தலைமன்னார் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இராமேஸ்வரம் மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வருடத்தில் இதுவரை இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 131 இந்திய மீனவர்கள் 18 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (878)
திருமுருகன் கொம்நெற்
பணியாளர் தேவை
321, K.K.S Road, Jaffna.
077 755 4528

# மரண அறிவித்தல்



பிறப்பு 18 - 10 - 1936

இறப்பு 23 - 02 - 2025

## பஞ்சாட்சரம் தவமணி

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் தவமணி நேற்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சாட்சரத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் அன்னலட்சுமி, சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும் ஜெயந்திமாலா, பராசக்தி, சாந்திமலர், சுமுதினி, பவானி (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்றவர்களான நடேசபிள்ளை, பூவேந்திரராஜா மற்றும் வாமதேவா, இராமநாதன், குணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2025) திங்கட்கிழமை மதியம் 01.30 மணியளவில் புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உரயப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 856 0753
076 365 1856 (C-2319)

*தகவல்:*
குடும்பத்தினர்

நிர்வாக உதவியாளர் தேவை (ஆண்)
ஆலய நிர்வாக மற்றும் செயற்பாடுகளுக்கு உதவுதல், நாளாந்த நிதி நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்
♦ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
♦ ஆலயத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
♦ சுய விபரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி (3499)
செயலாளர்,
பரிபாலன சபை,
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
பொன்னாலை.
மேலதிக விபரங்களுக்கு :
076 170 7073, 077 340 0918
(சுய விபரத்தினை மேற்குறிப்பிட்ட Whatsapp இலக்கத்திற்கு அனுப்பலாம்)
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2025

காணி விற்பனைக்குண்டு
நீர்வேலிச் சந்தியில், அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (3502)
074 38 25 961
076 91 97 566

வீடு தேவை
யாழ். நகரை அண்மித்த பகுதியில் அரச துறையில் பணிபுரியும் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. (3505)
தொடர்புகளுக்கு
076 791 0034

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-2320)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வீடு வாடகைக்கு
கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு. விபரம் நேரில் பேசிப் பெற்றுக்கொள்ளலாம். (3491)
077 711 1716
076 860 4501

ஊரெழுவில் 8 பரப்பு காணி விற்பனைக்கு
♦ பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம்
♦ 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்.
♦ காணியின் இரண்டு பக்க பாதையும் தார் வீதி
♦ நல்ல சூழல்
♦ செம்மண். (3481)
077 617 2892

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
• Visit visa
• Student visa
• Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (834)
075 033 6759

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.9, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org